Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00


நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20 % விசேட சலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributers)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி., கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166,ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993



மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | சித்திரை 28 | ஹிஜ்ரி 1427 | ற.ஆகிர் 12 | (11.05.2006) | வியாழக்கிழமை | இதழ் 223


# போரா? சமாதானமா?

## தீர்மானிக்கக் கோருகிறார் விசேட தூதுவர் அகாஷி!



கொழும்பு —

சீர்குலைந்து போயிருக்கும் போர் நிறுத்தத்தை சர்வதேச சமூகத்தால் மீளப் புதுப்பிக்க முடியாது. விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும்தான் போரா? சமாதானமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டுமென ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்தார்.

இலங்கைக்கான தனது நான்கு நாள் பயணத்தின் நிறைவில் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திய யசூஷி அகாஷி மேலும் தெரிவித்ததாவது -

இந்த அமைதி முயற்சிகளுக்கான முழுப் பொறுப்பாளர்களும் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தான்.

அமைதி முயற்சிகள் தொடர்பாக இந்த மாத இறுதியில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் புலிகளின் ஐந்து ஆட்லறிகள்!

கொழும்பு —

பளைப் பகுதியில் விடுதலைப் புலிகள் தமது நீண்டதூர ஆட்லறிப் பீரங்கிகளைப் பொருத்திவைத்திருப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பளைப் பகுதியில் 130 மி.மீ. நீண்டதூர ஆட்லறிகள் ஐந்தைப் புலிகள் பொருத்தியிருப்பதுடன் -

இந்தப்பகுதி முன்னரங்க நிலைப் பகுதியில் பெருமளவு புலிகள் குவிக்கப்பட்டிருப்பதாகவும் படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

## வரணி படை முகாம் முன்பாக மந்துவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி - மந்துவிலில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோரின் நிலைமையை வெளிப்படுத்தக் கோரி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நேற்று வரணியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வரணி - பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் உள்ள இராணுவத்தின் 52 ஆம் டிவிசனின் தலைமையகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தையடுத்து பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டு, கொடிகாமம் பகுதியில் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டனர்.

மந்துவிலில் 8 இளைஞர்கள் காணாமற்போனமை தொடர்பாக - கிராமசேவையாளர் மூலம் விசாரணைகளை நடத்துவதாக 52 ஆம் டிவிசன் அதிகாரி உறுதியளித்திருந்தும், எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. இதையடுத்து பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மந்துவில் கிழக்கிலிருந்து மூன்று (08 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண் மீது

## 2 இளைஞர்கள்

# காவலரண் மீது கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்

சுண்டிக்குளியில் இராணுவக் காவலரணுக்கு அருகே வீதிப் பாது காப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியா தோர் கிரனேட் தாக்குதல் மேற் கொண்டதாகக் கூறப்படுகிறது.

நேற்று நண்பகல் 12 மணியள வில் சுண்டிக்குளியில் காவலில் ஈடு பட்டிருந்த இராணுவத்தினர் மீது நடத் தப்பட்ட தாக்குதலில் இரு இராணு வத்தினர் காயமடைந்ததாகக் கூறப் படுகிறது.

இதையடுத்து அங்கிருந்த இரா ணுவத்தினர் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# வேலணையில் கிளைமோர்; இரு கடற்படையினர் காயம்!

யாழ்ப்பாணம்

யாழ்.வேலணையில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரண்டு கடற்படைச் சிப்பாய்கள் படு காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படு கிறது.

நேற்றுக்காலை 9.10 மணியள வில் வேலணை -வங்களாவடி பெருங் குளம் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகில் சைக்கிள் ஒன்றில் பொருத்தப் பட்டிருந்த கிளைமோர் வெடித்ததில் இரண்டு கடற்படைச் சிப்பாய்கள் காய மடைந்தனர்.

இந்தத் தாக்குதல் கால்நடையாக ரோந்து சென்ற கடற்படையினரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக படைத்தரப்புத் தகவல்கள் தெரி வித்தன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கடற்படைச் சிப்பாய்கள் இருவரும் ஊர்காவற்துறை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக பலாலி இராணுவ வைத் தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட் டனர்.

தாக்குதல் சம்பவத்தையடுத்து சம்பவம் நடைபெற்ற இடத்தில் பெரு மளவு கடற்படையினர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற் கொண்டவேளை அந்தப் பகுதியில் இருந்தவர்களை மிகவும் மோசமாகத் தாக்கிக் காயப்படுத்தியதாகத் தெரிவிக் கப்படுகிறது.

# 2 இளைஞர்கள் வேலணையில் படையினரால் கைது!

யாழ்ப்பாணம்

வேலணையில் நேற்றுக்காலை இராணுவத்தினரால் இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

வேலணை வடக்குப் பகுதியில் நேற்றுக்காலை நூற்றுக்கணக்கான படையினர் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மார்க்கண்டு தமிழ்ச்செல் வன் (வயது 21), மார்க்கண்டு ரகு நாதன் (வயது 23) ஆகியோர் கைது செய்யப்பட்டதாக இவர்களின் சகோ தரி - மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறை யிட்டுள்ளார்.

# படுகாயமடைந்த படையதிகாரி வைத்தியசாலையில் மரணம்!

கொழும்பு

பொலனறுவ - சிங்கபுரவில் 17 நாட்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட கிளை மோர் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவ அதிகாரியொருவர் நேற்று முன் தினம் மரணமானார்.

சிங்கபுரவில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்கு தலில் மேஜர் பேர்சி ஜெகத் என்ற அதிகாரி கொல் லப்பட்டதுடன் மேலும் ஐவர் படுகாயமடைந் தனர்.

இவர்களில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கடந்த 22 ஆம் திகதி மரணமாகியிருந்தார்.

மேலும் ஒரு இராணுவ அதிகாரியான லெப் டினன்ட் ஹேவகே என்பவர் நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் கொழும்பு இரா ணுவ வைத்தியசாலையில் மரணமானார்.

இவரது சடலம் அவரது சொந்த ஊரான மாத்தறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தக னம் செய்யப்பட்டது.

# வடக்கு - கிழக்குப் பகுதிகளில் திட்டமிட்டபடி உயர்தரப் பரீட்சை

## பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை வடக்கு - கிழக்கிலும் நடத்துவதற்கான நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பரீட்சை கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அதிகா ரிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாய கம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இதற்கமைய வடக்கு - கிழக்கில் 230 பரீட்சை நிலையங்கள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# SRI LANKA RED CROSS SOCIETY

## AUSTRALIAN RED CROSS

Australian Red Cross (ARC) is supporting Sri Lanka Red Cross Society (SLRCS) in implementation of Community - based First Aid Programme for the Tsunami affected.

### VACANCY

**Health Coordinator - First Aid - Jaffna Branch**

**Qualification & EXPERIENCE REQUIRED**

* University Degree in the field of Health or Science or Social Science.
* A Minimum of three (03) years working exprience in Community - based Development Projects.
* Experience as a First Aid instructor.

**DUTIES & RESPONSIVILITIES**

* Plan, facilitate, develop train and guide the volunteers in monitoring and in implementation of the project.
* Develop database for First Aid instructors and provid ers and keep records.
* Prepare financial reports and submit to the SLRCS National headquarters, Branch headquarters and to the ARC in a timely manner.
* Translate, Interprete and carryout all the project duties and follow up purchase and procurement of equipments necessary to the First Aid project.
* Prepare work and movement plans and submit them to ARC delegate and to SLRCS National headquarters and Branch headquarters.

**SKILLS REQUIRED**

* Excellent command in Tamil and English lanquage skills with working knowledge of Sinhala is an advantage.
* Computer literacy.
* Good managerial, Communication, leadership and interpersonal skills.
* Excellent networking and facilitating skills.

Only the short listed candidates will be contacted for the interviews.

**Applications should be submitted no later than 24th May 2006 to :**

Chairman,
Jaffna Branch,
Sri Lanka Red Cross Society,
73, Kandy Road,
Jaffna.

Please quote the references number hrm 0152 on top left hand corner of the envelope.

[C/5326]

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந் - கௌதமி நடித்த

**ஆனஸ்ட்ராஜ்**

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

## ராஜா யாழ்ப்பாணம்



புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர்
மற்றும் பலர் நடித்த

**அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது**

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

நேரம் : 10.30,2.30,6.30,9.30

## மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு

அஜித்குமார், சதா
மற்றும் பலர் நடித்த

மூன்றாவது வெற்றி வாரம்

**திருப்பதி**



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

# PATRICIAN INSTITUTES

## VACANCY

### POST OF RADIO AND T.V REPAIRING INSTRUCTOR


மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன் 20.05.2006க்கு முன் நேரில் சமூகம் தரவும்.

குறிப்பு : Oscilloscope (அசைவுகாட்டி) உபகரணம் பாவிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

மேலதிக விபரங்களுக்கு :
*பதிவாளர்.*
பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனம்,
59, ST. PATRICK'S ROAD, JAFFNA.
T.P No : 021 - 222 6148

[C/5325]

# முதலாம் ஆண்டு நினைவு நாளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



## அமரர் சின்னத்தம்பி மாணிக்கம்

(வடமராட்சி - பொலிகண்டி, ஆழக்கிணற்றடி)

மலர்வு : 08 ★ 08 ★ 1917
உதிர்வு : 23 ★ 04 ★ 2005

திதி : விய வருஷம் சித்திரை 29ஆம் திகதி பூர்வபட்ஷ சதுர்த்தசி (11.05.2006)

அன்னாரின் நினைவஞ்சலியும்,
ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நிகழும்
இந்நாளில் அவரின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்தித்து என்றும் அவர் நினைவில் வாழும்

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

[C/5324]

# மரண அறிவித்தல்



## அமரர் நாகராசா சிவபாக்கியம்

(சங்கானை)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி நாகராசா சிவபாக்கியம்** அவர்கள் 06.05.2006 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் அமரர் சபாபதி நாகராசா (விநாயகர் அரிவு ஆலை உரிமையாளர், சங்கானை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா, பூலோகத்தின் மூத்த புதல்வியும், சபாபதிப்பிள்ளை, பார்வதிப்பிள்ளையின் அன்பு மருமகளும், கனகசபாபதி (சவுதி அரேபியா), சியாமளா (கனடா), கனகலிங்கம் (கனடா), சசிகலா, சந்திரகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணாவின் பெரியதாயாரும், மங்களகௌரி, மகேஸ்வரன் (கனடா), புஷ்பகுமாரி (கனடா), ஜெயபாஸ்கரன், மோகனானந்தன், குமுதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, கந்தையா, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்லம்மா (இராசமணி) மற்றும் சிவக்கொழுந்து, கதிரமலை ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசநாயகம், செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிரோஜன், பிரகாஷ், கோகுலன், பானுரூபி, பாரதி, ஆரவி, மிதிலா, குணாளன், ஷாஜினி, ஷாஜினிதன், ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமா வார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11.05.2006 வியாழக்கிழமை, பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் அரிவு ஆலை,
பிரதான வீதி,
சங்கானை.

(2269)

தகவல் : குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவலைகள்

மனம் மகிழ 29 01 1941



மனம் நெகிழ 22 04 2005

## அமரர் செல்வி இராஜேஸ்வரி வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற போதனாசிரியர்)



மெழுகுதிரிபோல உமை உருக்கி
எமக்கு வெளிச்சம் தந்தவரே!
பாரினில் உமக்கென்று யாருமில்லை என்றோ
விழிமூடி எமைவிட்டுப் பிரிந்து சென்றீர் பெரியமாமி!
அன்பான உங்கள் பார்வை
இனிமையான "மானா" எனும் வார்த்தை
வஞ்சகமற்ற உங்கள் இதயம்
எழிலான உங்கள் தோற்றம்
ஆழமான உங்கள் அறிவு
பரவசமான உங்கள் பக்தி
எளிமையான உங்கள் வாழ்க்கை
தன்னலமற்ற உங்கள் சேவை
சுவையான உங்கள் உணவு
தினமும் எம்முன்னே தோன்றி மறையுதம்மா.
உங்களை நான் மறந்தாலும் ஞாபகப்படுத்தவென்று
நானுறங்கும் வேளையிலே இடையிடையே வந்திங்கு
காட்சிதனைக் காட்டுகின்றீர் கனவெனும் பெயரினிலே.
உங்கள் உயிர் பிரிந்தது போல் எமைவிட்டு
உங்கள் நினைவும் நீங்கிடுமோ எங்கள் பெரியமாமி!
உங்கள் நினைவுடன் என்றென்றும் நாமிருப்போம்.



கி.மாதுளா
ஆடுவான் தோட்டம், அல்வாய் கிழக்கு

[2268]

# அரசின் பொறுமை எவ்வளவு காலத்துக்கு என்பதே மில்லியன் டொலர் கேள்வியாகும்

## என்கிறார் வெளியுறவு அமைச்சர் மங்கள



கொழும்பு—

விடுதலைப் புலிகள் பல்வேறு விதமான ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டாலும் அரசாங்கம் பொறுமைகாத்து வருகிறது. எனினும் அரசாங்கத்தின் பொறுமை எவ்வளவு காலத்துக்கு என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வியாகும். எமது பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்தியா சென்ற வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தனது மூன்று நாள் பயணத்தின் நிறைவில் நேற்றுமுன்தினம் இந்திய ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது -

இலங்கையின் பிரதேச ஒற்றுமை மற்றும் அரசியல் நிலைத்தன்மைக்கு ஆதரவான நிலையை இந்தியா எம்மிடம் தெரிவித்துள்ளது. இலங்கையின் விவகாரங்களில் இந்தியா நேரடியாகத் தலையிடாமல் இருந்தாலும் இரு தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து ஆராய்ந்து வருகிறது.

இந்தியா - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு அப்பால் சீனாவிடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்தும் இலங்கை அரசாங்கம் ஆயுதக் கொள்வனவில் ஈடுபடவில்லை.

தற்கொலைத் தாக்குதல், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல் மூலம் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வெளிவிவகார அமைச்சராக இருந்த கதிர்காமர் கொல்லப்பட்டது தொடக்கம் 200 வரையிலான பொதுமக்களை விடுதலைப் புலிகள் படுகொலை செய்துள்ளனர்.

இருந்தபோதும் அரசாங்கம் பொறுமை காத்து வருகிறது. பேச்சுக்கள் மூலமான தீர்வுதான் சரியான இருக்கும் என்று எமது அரசாங்கம் கருதுகிறது. எமது அரசாங்கத்தின் பொறுமை எத்தனை காலம் என்பது மில்லியன் டொலர் கேள்வியாகும். எமது பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு.

பேச்சுக்களுக்கான கதவுகளை அரசாங்கம் மூடிவிடவில்லை. இதைத்தான் இந்தியாவிடமும் நாம் தெரிவித்துள்ளோம்.

விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சு மேசைக்குத் திரும்புவதற்கான அனைத்து அழுத்தங்களையும் சர்வதேச சமூகம் செலுத்தவேண்டும். மேற்குலகமும், ஐரோப்பிய ஒன்றியமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பை தடைசெய்ய வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்ய வேண்டும். அப்போதுதான் விடுதலைப் புலிகள் பேச்சுக்குத் திரும்புவர்.

இனப்பிரச்சினைக்கான அனுசரணையாளரான நோர்வேயை மாற்ற எமது அரசாங்கம் விரும்பவில்லை. நோர்வே தனது பணியைச் சிறப்பாக செய்து வருகிறது.

கருணா குழுவினரது ஆயுதங்களைக் களையவில்லை என்று விடுதலைப் புலிகள் கூறுவது சரியானது அல்ல. பேச்சுக்களில் பங்கேற்காமல் இருப்பதற்காக விடுதலைப் புலிகள் இத்தகைய செய்திகளைப் பரப்பி வருகின்றனர். கருணா குழுவும் பயங்கரவாதிகளே. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கருணா குழு இயங்கவில்லை.

ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷியை கிளிநொச்சியில் சந்தித்த விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்தால் பேரழிவு ஏற்படும் என்று எச்சரித்துள்ளார். புலிகளின் இந்த எச்சரிக்கை எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. எனக்கு இது ஒரு செய்தியும் அல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பில் தங்கியுள்ளோரின் விபரங்கள் திரட்டல்

கொழும்பு—

கொழும்பு நகரில் தங்கியுள்ள மக்களின் விபரங்களைத் திரட்டுவதற்கு பொலிஸார் திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கொழும்பு நகர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள தற்காலிக தங்குமிடங்கள் தொடர் மாடி வீட்டுத் தொகுதிகளில் தங்கியுள்ளவர்களின் தகவல்கள் திரட்டப்படும்.

இந்தத் தகவல்கள் திரட்டப்படும் போது தற்காலிகமாக தங்கியுள்ளவர்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (01)

## படையினருக்கு ஆசிவேண்டி நாடாளுமன்றில் பிரித் ஓதல்

கொழும்பு—

இராணுவத்தினர் மற்றும் நாட்டு மக்களின் பாதுகாப்புக்காக ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்ற சபை நடுவில் செத் பிரித் ஓதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் ஆற்றிய விசேட உரையின் பின்னர் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை - விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இணைத் தலைமை நாடுகள் அழுத்தம் கொடுக்காதது ஏன் என அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக தற்போது ஜப்பானின் செயற்பாடு நோர்வேயின் செயற்பாட்டுடன் இணங்கிச் செல்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (01)

## புலிகளின் நிலைகள் மீது படையினர் தாக்குதல்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - வவுணதீவில் விடுதலைப் புலிகளின் காவலரண்கள் மீது இராணுவத்தினர் நடத்திய மோட்டார் தாக்குதலில் போராளி ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தை விடுதலைப் புலிகள் உடனடியாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் அந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டுக் கொண்டிருந்த வேளை படையினர் ஆர்.பி.ஜி ரக ரொக்கட் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதில் போராளி ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவத்தை நேரடியாக பார்வையிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் எவ்வித பதிலும் அளிக்காது திரும்பிச் சென்றதாக புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா மோகன் தெரிவித்தார்.

### படையினர் காயமடைவது அதிகரிப்பு

## இராணுவ மருத்துவமனைகளில் நவீன உபகரணங்கள் பொருத்தல்

கொழும்பு—

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பகுதிகளில் படுகாயமடைந்து வரும் படையினர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அனுராதபுர இராணுவ மருத்துவமனையில் நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் படுகாயமடைந்து வரும் படையினருக்கு மேலதிக சிகிச்சை அளிக்கும் வகையில் உடனடி நடவடிக்கையாக இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பொது மருத்துவமனைகளில் படையினரை அனுமதித்து அவர்களது உடல் நிலைமை மோசமடைவதைத் தவிர்க்க இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், படையினருக்கு அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான சிறப்புப் பிரிவும், சிறப்பு மருத்துவக் குழுவினரும் அனுராதபுரம் மருத்துவமனையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அனுராதபுர சிங்களவர்களுக்கு பொலிஸாரால் ஆயுதப் பயிற்சி!



கொழும்பு—

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள சிங்களவர்களுக்கு பொலிஸார் பகிரங்க ஆயுதப் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மதவாச்சியில் பெண்கள் உட்பட சிங்கள எல்லையோர கிராம மக்களுக்கான இந்தப் பயிற்சிகள் நேற்று முன்தினம் தொடங்கின.

இதனிடையே எல்லையோர சிங்கள கிராமங்களில் மேலதிக பாதுகாப்பை உருவாக்கவேண்டும் என்று அமைச்சர் திஸ்ஸ கரலியத்த வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின் போது அவர் பேசியதாவது -

கெப்பிட்டிக்கொலாவ போன்ற எல்லையோர சிங்கள கிராமங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால், இது வரை அந்தக் கிராமங்களுக்கு அரசாங்கம் உரிய பாதுகாப்புக்களை ஏற்படுத்தித் தரவில்லை. இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனே அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

இத்தகைய பாதுகாப்பு பிரச்சினைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையால் 12 பாடசாலைகள் அந்தப் பகுதிகளில் மூடப்பட்டுள்ளன.

எல்லையோரக் கிராமங்களில் நடத்தப்பட்ட அண்மைய தாக்குதல்களின் போது அனுராதபுரத்திலிருந்து அம்புலன்ஸ் வண்டிகளை ஏற்பாடு செய்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

எதிர்காலத்தில் தாக்குதல்களைத் தடுக்கும் வகையில் தட்டுவெவ தொடக்கம் கெப்பிட்டிக்கொலாவ வரையில் முழுமையாக பதுங்குகுழிகளை படையினர் அமைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## சுயாதீன ஆணைக்குழு நியமனம் மகிந்தவுக்கு, அகாஷி கண்டனம்!





கொழும்பு—

அரசியல் யாப்பை மீறி சுயாதீனக் குழுககளை நியமித்தமைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த அகாஷி - ஐக்கிய தேசியக் கட்சியுடனான சந்திப்பின் போது இந்தக் கண்டனத்தை தெரிவித்ததாக அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூர்ய கூறினார்.

இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பாக அகாஷியுடன் விவாதித்ததாகவும், ஐக்கிய இலங்கைக்குள் கூட்டாட்சி முறையிலான தீர்வு என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாக இருப்பதாகவும் அகாஷியிடம் கூறியுள்ளதாகவும் கரு ஜயசூர்ய தெரிவித்தார்.

## தற்போதைய மோசமான நிலைமைக்கு ஜே.வி.பி, ஹெல உறுமயவே காரணம்

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு—

தற்போதைய மோசமான நிலைக்கு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவே காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கூறியதாவது -

ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்த நாட்டை போருக்கு நகர்த்திச் செல்லும் என்று நாங்கள் குற்றம் சாட்டினோம். இப்போது அதுதான் உண்மையாகவுள்ளது.

நாட்டினது பாதுகாப்பும், பொருளாதார நிலைமையும் படுமோசமாக சீர்குலைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் செலவினம் அதிகரித்துள்ளது.

நான் நுகர்வோர் விவகார அமைச்சராக இருந்த போது லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே.வி.பியினர் - இப்போது பொருட்களுக்கான பாரிய விலை உயர்வு ஏற்பட்டுள்ள நிலையிலும் அமைதி காத்து வருகின்றனர்.

நாட்டினது தற்போதைய மோசமான பாதுகாப்பு நிலைமைகளைச் சீர்ப்படுத்த மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உதவத் தயாராக உள்ளது.

ஆனால், இந்த ஆதரவு என்பது வெற்றுக் காசோலையில் கைச்சாத்திட்டுத் தருவது போன்றது அல்ல.

தனது கூட்டுக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியுடன் பேசும் போது ஒரு நிலைப்பாட்டை மகிந்த மேற்கொள்கிறார். அதன் பின்னர் மற்றொரு நிலைப்பாட்டைத் தெரிவிக்கிறார்.

அப்படியானால், அரசாங்கம் என்ன நிலைப்பாட்டை மேற்கொள்ள உள்ளது? என்பதை நாம் அறிய விரும்புகிறோம். நாட்டினது தற்போதைய நிலைமைக்கு ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும்தான் காரணம். இந்தக் கட்சிகளே மகிந்தவை போருக்குத் தள்ளிவிட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

# சிறுவர் நலன் பேணல் குறித்து மன்னாரில் கருத்தமர்வு

மன்னார் —

சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் நலன்பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வு மன்னார் வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இயங்கிவரும் சிறுவர் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தமர்வில் - வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற தாதியர்கள், விடுதிப்பராமரிப்பாளர்கள் என சுமார் 35 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

யுனிசெவ் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இடம்பெற்ற இந்தக் கருத்தமர்வை மன்னார் மாவட்ட மனநல வைத்திய அதிகாரி டொக்டர் சுகந்தி கலைச்செல்வன் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தக் கருத்தமர்வில் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல், போதைப் பொருள் துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான சுரண்டல், சித்திரவதை சுதந்திரத்தைப் பறித்தல் மற்றும் புனர்வாழ்வும் பராமரிப்பும், சிறுவர் தொடர்பான சட்டங்கள் என்பன கருப்பொருளாகக் கொள்ளப்பட்டன.

வைத்திய தேவைகள் நிமித்தம் சிகிச்சைக்காக வரும் 18 வயதுக்கும் குறைவானோரின் பிரச்சினைகளுக்கு கூடிய கவனம் செலுத்துவதோடு அவை தொடர்பான இரகசியத்தன்மையும் பேணவேண்டும் எனவும் கருத்தமர்வை நடத்தியவர்கள் கேட்டுக்கொண்டனர். (மோ)

## தற்காப்பு பயிற்சி ஆரம்ப நிகழ்வு

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.


நிகழ்வில் பொதுச் சுடரை கிராமிய அபிவிருத்தி வங்கி உதவிப் பணிப்பாளர் கலைவாணன் ஏற்றினார்.


தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றினார்.

பயிற்சியை மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சைமன் ஆரம்பித்து வைத்தார்.

சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நிகழ்த்தினார்.

# மூத்த தளபதி கேணல் கிட்டுவின் ஓவியங்களின் பிரசுர வெளியீடு





கிளிநொச்சி —

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் ஓவியங்களின் பிரசுர வெளியீடும், சோ.சி. கலைக்கதிரின் கறுப்பு வெள்ளைக் கோடுகள் ஓவியக் கண்காட்சியும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வுகள் கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் இடம்பெற்றன.

முற்பகல் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ நுண்கலைக் கல்லூரிகளின் பணிப்பாளர் தணிகைமாறன் ஏற்றினார். தேசியக் கொடியை கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரி முதல்வர் இசைஞன் ஏற்றினார். ஈகச் சுடரை கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வளநாடன் ஏற்றினார். மூத்த தளபதி கேணல் கிட்டுவின் ஓவியங்களின் பிரசுரத்தை ஊடகவியலாளர் ராதேயன் வெளியிட, ஓவியர் ஓவி[illegible]நாதன் அதனைப் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சோ.சி.கலைக்கதிரின் ஓவியக் கண்காட்சிக் கூடத்தை ஊடகவியலாளர் ராதேயன் திறந்து காட்சியைத் தொடக்கி வைத்தார்.

# கட்டுமான தொழிலாளர்களை பதிவு செய்யக் கோரிக்கை

கிளிநொச்சி —

கட்டுமானத்துறையில் ஈடுபடும் சகல தொழிற்துறைத் தொழிலாளர்களான மேசன், தச்சர், வர்ணம் பூசுனர், மின்னிணைப்பாளர், மின்ஒட்டுனர், நீர்க்குழாய் இணைப்பாளர் ஆகியோரை இனம் காண்பதற்காகவும், அவர்களின் தொழிற் திறனை விருத்தி செய்வதற் காகவும், தொழிற் தேர்ச்சி, அடிப்படையில் உரிமம் வழங்குவதற்காகவும் மற்றும் புதிய தொழிலாளர்களை உருவாக்குதல் போன்ற செயற் திட்டங்களை உள்ளடக்கி, தமிழீழ கட்டுமான பொறியியற் செயலகம் கட்டட நிர்மாணத்துறை தொழிலாளர்களின் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதற்கிணங்க துணுக்காய் பிரதேச உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளரூடாக பதிவுச் செயற்பாடுகள் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 26 ஆம் திகதி வரை மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் கட்டுமானத்துறையில் பங்குபற்றும் அனைத்து தொழிலாளர்களையும் தொழிற்பதிவுக்குட்படுத்துமாறு தமிழீழ கட்டுமான பொறியியற் செயலகம் தெரிவித்துள்ளது.

# சமகால அரசியல் கருத்தரங்கில் 6 பேர் போராட்டத்தில் இணைவு

வட்டக்கச்சி —

முல்லைத்தீவில் இடம் பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் 6 பேர் விடுதலைப்போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை நண்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி தலைமையில் சமகால அரசியல் கருத்தரங்கு இடம் பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன், சிறப்புத் தளபதி துரை, கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை, கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வி பூரணி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தக் கருத்தரங்கில் அரச, அரச சார்பற்ற நிறுவன பணிப்பாளர்கள், பொது மக்கள், வர்த்தகர்கள், கடற்தொழிலாளர் சங்க சமாசத்தினர், பாடசாலை மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (09)

# கிளிநொச்சி, முல்லையில் எரிபொருள் தட்டுப்பாடு



கிளிநொச்சி —

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எரிபொருளுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வருகிறது. ஓமந்தை மற்றும் உயிலங்குளம் சோதனைச் சாவடிகள் அடிக்கடி மூடப்படுவதால், எரிபொருட்களுக்கான தட்டுப்பாடும், அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் தொடர்ந்தும் இந்த மாவட்டங்களில் நிலவிவருகிறது.

கிளிநொச்சி நகரில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு எரிபொருட்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் விநியோகம் செய்து வருகின்றன.

பெருமளவான எரிபொருள் விற்பனை நிலையங்கள் பல நாட்களாக மூடப்பட்டுள்ளன. ஒரு சில எரிபொருள் நிலையங்களே மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றன.

அந்த நிலையங்களிலேயே பெருமளவான மக்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருட்களைப் பெற்று வருகின்றனர்.

# சிமெந்து தட்டுப்பாட்டால் கட்டட பணிகள் ஸ்தம்பிதம்

வட்டக்கச்சி —

கிளிநொச்சி மாவட்டத்தில் சிமெந்து தட்டுப்பாடு நிலவி வருவதன் காரணமாக கட்டட வேலைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

சிமெந்துத் தட்டுப்பாட்டால் வீடமைப்பு அதிகார சபை, அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் மேற்கொண்டுவரும் 40 புதிய வீடுகள் அமைக்கும் பணியை தொடர்ந்து செயற்படுத்த முயாதநிலை ஏற்பட்டுள்ளதாக கிளி நொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளதுடன் கட்டட வேலைக்கான சிமெந்துகள் கிடைக்கப்பெறும் பட்சத்திலேயே, வீட்டுத் திட்டப் பணியைத் தொடர்ந்தும் செயற்படுத்த முடியுமெனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (09)

## அக்கராயன் பிரதேச ஊரக மேம்பாட்டு பேரவை மாதாந்த கலந்துரையாடல்

வட்டக்கச்சி —

அக்கராயன் பிரதேச ஊரக மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்த கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யூனியன்குளம் பொது மண்டபத்தில் இடம் பெற்றது. அக்க ராயன் பிரதேச ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வே.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சிறப்புரையை அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் நிகழ்த்தினார்.

ஊரக மற்றும் கிராமத் தலைவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் தமிழீழ இறுதிப் போருக்கான மக்கள் அனைவரின் பங்களிப்புக் குறித்தும், இது தொடர்பாக மக்கள் விழிப்பு குறித்தும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (09)

## நீர்வெறுப்பு நோய்குறித்த விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி —

தற்போது அதிகரித்து வரும் நீர் வெறுப்பு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 16ஆம் திகதி காலை பத்து மணிக்கு கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மாகாண சுகாதார பிரதிப்பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுசுகாதார பரிசோதகர்கள், கால்நடை மருத்துவர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகரசபை செயலாளர்கள் மற்றும் பிரதேசசபை செய லாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.வாமன் கேட்டுள்ளார்.

## உதவி மருத்துவ கற்கையில் சித்தி பெற்றோர் விபரம்

கிளிநொச்சி —

தமிழீழ சுகாதார சேவை நடத்திய உதவி மருத்துவ கற்கைநெறியின் இறுதியாண்டுப் பெறுபேறுகள் வெளி யாகியுள்ளன.

இந்தப் பெறுபேற்றின்படி, இரண்டாம் வகுப்பில் - எம்.எழிலரசி, எஸ்.சிவலதா, வீ.சிவமலர் ஆகியோரும் சாதாரண தரத்தில் - பி.ஜெனிதா, எம்.சுகுமார், வீ.விஜயசாந்தி ஆகி யோரும் சித்தியடைந்துள்ளனர்.

இவர்கள் தாயகத்தில் உருவான முதற்தொகுதி உதவி மருத்துவர்கள் என்ற பெருமையைப் பெறுவதுடன் பின்தங்கிய பிரதேசங்களில் விரைவில் கடமையேற்கவுள்ளதாகவும், தமிழீழ சுகாதார சேவைகள் தெரிவித்துள்ளன.

# காரைநகரில் மீன்பிடிக்க கடற்படை அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம் —

காரைநகர் பிரதேசத்தில் மீன் பிடிப்பதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் தொழில் செய் வதற்கான அனுமதியைக் கடற்படை யினர் வழங்காதபடியால் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொழிலை இழந்து பொருளாதார பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

தொழில் இழந்து இருக்கின்ற மீனவக் குடும்பங்கள் தொழில் செய்ய அனுமதி பெற்றுத்தரக்கோரி காரை நகர் பிரதேச செயலர், யாழ். மாவட்ட கடற்தொழில் சமாசம் ஆகிய இடங்க ளிலும் முறையீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காரைநகர் பிரதேசத் தைச் சேர்ந்த மீனவர்களுக்கு அடிக் கடி கடற்படையினரால் தொழில் செய் வதற்கான அனுமதி மறுக்கப்பட்டு வந்தமையால், சில மீனவர்கள் தொழில் செய்ய அனுமதி வழங்கு மாறு காரைநகர் கடற்படை முகாமுக் குச் சென்று தம்மைத் தொழில் செய்ய அனுமதிக்குமாறு கடற்படை அதிகாரியிடம் கேட்டதாகவும், அப் போது சிலர் தாக்கப்பட்டு காயப்பட்ட தாகவும் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிக ளிடம் கேட்டபோது காரைநகர் கடற் படை முகாம் அதிகாரியிடம் தொழில் செய்ய அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்டு தொழில் புரிவதற்கான அனு மதியைப் பெற்றுக்கொடுக்க நட வடிக்கை எடுக்கப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ரோகித பிரியதர்ஷன தெரிவித்தார்.

## சொந்த இடங்களுக்கு செல்லும் வெளிமாவட்ட மாணவர்கள்

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அதாதாரண சூழ்நிலை காரணமாக யாழ். பல்கலைக்கழக வெளிமாவட்ட மாணவர்கள் வெளியேறி வருகின்ற னர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடை பெற்று வந்த இரண்டாம் அரையாண் டுப் பரீட்சைகள் யாவும் இடைநிறுத் தப்பட்டுள்ளதையடுத்து விடுதிகள் மற் றும் ஏனைய இடங்களில் தங்கியி ருந்து கல்வி கற்று வந்த வெளி மாவட்ட மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் படையினரின் கெடுபிடிகள் நாளாந்தம் அதிகரிக்கப் பட்டு வருவதால் பாதுகாப்புக்கு ஏற் பட்ட அச்சுறுத்தல் காரணமாக தாம் சொந்த இடங்களுக்குச் செல்லவேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது என வெளி மாவட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

## கடும் வரட்சி காரணமாக நோய்த் தொற்று அதிகரிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் சிறுவர் முதல் பெரி யோர் வரை காய்ச்சல், இருமல், வயிற் றுளைவு, வயிற்றோட்டம் உட்பட பல் வேறு நோய்களுக்கும் உள்ளாகி வரு கின்றனர்.

இவ்வாறு நோய்த் தாக்கத்துக்கு உட்படுவோர் யாழ். போதனா வைத் தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்கின்ற னர்.

தற்போதைய கடும் வரட்சியால் குடாநாட்டிலுள்ள சிறு குளங்கள் அனைத்தும் வற்றியுள்ளன. இதனால் கட்டாக்காலி நாய்கள் குடிநீர் தேடி அலைவதுடன், பெருமளவு கால்நடை கள் கடும் வரட்சியால் நோய்வாய்ப் பட்டும் இறந்துள்ளன.

குறிப்பாக குடாநாட்டின் தீவகம் மற்றும் அராலி உட்பட கரையோரப் பகுதி மக்கள் குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் தமது குடிநீர்த் தேவைக்காக நீண்டதூரம் செல்லவேண்டிய நிலையும் ஏற்பட் டுள்ளது.

## இரு இளைஞர்களைக் காணவில்லை

யாழ்ப்பாணம் —

இளைஞர்கள் இருவரைக் காண வில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் அவர்களது உறவினர்களால் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

வி.ரி.எஸ் வீதி - உரும்பிராயைச் சேர்ந்த வி.நிஷாந்தன் (வயது 20), ஈவினை வடக்கு புன்னாலைக் கட்டு வனைச் சேர்ந்த சந்திரன் கமல தாசன் (வயது 17) ஆகிய இருவருமே காணாமற் போயிருப்பதாக முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இருவரும் கடந்த 4 ஆம் திகதி முதல் காணவில்லை என உறவினர் களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சதுரங்கப் போட்டியில் மகாஜனா முதலிடம்

யாழ்ப்பாணம் —

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டி முடிவுகளின்படி அனைத்து பிரிவிலும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி முதலிடத்தைப் பிடித்தது.

15வயது ஆண்கள் பிரிவில் - மகாஜனாக் கல்லூரி முதலாமிடம். அரு ணோதயக் கல்லூரி இரண்டாமிடம். பெண்கள் பிரிவில் - மகாஜனாக் கல்லூரி முதலாமிடம். மல்லாகம் மகாவித்தியாலயம் - இரண்டாமிடம்.

19 வயதுப் ஆண்கள் பிரிவில் - மகாஜனாக்கல்லூரி முதலாமிடம். யூனியன் கல்லூரி இரண்டா மிடம். பெண்கள் பிரிவில் - மகாஜனாக்கல்லூரி முதலாமிடம். மல்லாகம் மகாவித்தியாலயம் இரண்டாமிடம்.

முதலாமிடம்,. இரண்டாமிடங்களைப் பெற்ற பாடசாலைகள் மாவட்ட மட்டத்துக்கு செல்லவுள்ளன. (72)

## இருக்கைகள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம் —

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் நலன்கருதி யாழ்.நகரிலுள்ள தனியார் நிறுவனம் அன்பளிப்பாக அமைத்துக் கொடுத்த தற்காலிக தகரக் கொட்டகையில் அமைந்த சிமெந்து இருக்கைகள் போதாத நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிமெந்து இருக்கைகள் போதாத காரணத்தால், நோயாளர்கள் மற்றும் நோயாளர்களைப் பார்வையிட வருவோர் தரையில்அமர்ந்து இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, வைத்தியசாலை நிர்வாகம் இது தொடர்பாக அக்கறை எடுத்து, இந்த தற்காலிக கொட்டகையில் மேலதிக இருக்கைகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நோயாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

## பரீட்சை மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு —

அண்மையில் வெளியான க.பொ. த சாதாரணதரப் பரீட்சை பெறு பேற்று மீளாய்வுக்கு விண்ணப் பிக்கலாமென பரீட்சை ஆணையா ளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரி வித்தார்.

இந்த மீளாய்வு பெறுபேற்றுக் கான விண்ணப்பத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காவலரண் விரிவாக்கம்

கொக்குவில் —

யாழ்.குருநகர், கடற்கரை வீதி- சேமக்காலை சந்திக் காவலரண் மேலும் விரிவாக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே, பாதுகாப்பு அரண் அமைந்துள்ள நிலையிலும் வீதியை உள்ளடக்கிக் கொங்கிறீட் கற்களால் அடுக்கி செம்மண் பூச்சுகளால் அரணை மேலும் வலுப்படுத்தும் வேலைகளில் நேற்றுமுன்தினம் படையினர் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (206)

## சாகித்திய விழா போட்டி ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம் —

கலாசார மரபுரிமைகள் அமைச்சு இந்த வருடத்துக்கான சாகித்திய விழா போட்டிகளுக்கு பாடசாலை மாணவர்களிடமிருந்து ஆக்கங்க ளைக் கோரி யுள்ளது.

சிறுவர் நாடகம், சிறுவர் கதை கள், சித்திரக் கதைகள், நாட்டிய நாட கம், சிறுகதைகள் உட்பட பல்வேறு ஆக்கங்களை இந்தப் போட்டிக்கு அனுப்பலாம்.

பாடசாலை அதிபர்கள் ஊடாக இதற்கான விண்ணப்பங்கள் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரச அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாறுபட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும்.

## இரத்தத்திற்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் —

யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி தெரி வித்தார். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை கார ணமாக இரத்ததானம் செய்வோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள தாகவும் இதையடுத்தே குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

எனவே இரத்ததானம் செய்ய விரும்பும் நிறுவனம் சார்ந்த அமைப்புகள் 222 3063 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டால் அவர் களது இடத்துக்கு வந்து இரத்தம் பெறப்படுமெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## படையினரின் வைத்தியசாலை நாவற்குழியில் அமைப்பு


யாழ்ப்பாணம் —

நாவற்குழிப் பகுதியில் படையின ருக்கான வைத்தியசாலை ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நாவற்குழி அரச உணவு களஞ்சி யத்திற்கு முன்பாக கண்ணாடித் தொழிற்சாலை இயங்கிய கட்டடத்தில் வைத்தியசாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் பெருமளவான படை யினர் ஈடுபட்டு வருவதை அவதானிக் கக் கூடியதாக உள்ளது.

வைத்தியசாலை அமையவுள்ள பாதையைச் சுற்றி முட்கம்பிவேலி அமைக்கப்பட்டு தமது வேலைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை வைத்தியசாலைக்கு பாரிய தளபாடங்கள் மற்றும் தேவை யான பல உபகரணங்களும் எடுத்து வரப்பட்டு அந்தப் பகுதியில் வைக்கப் பட்டுள்ளதை அவதானிக்கக் கூடிய தாக இருக்கிறது.



சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க 2005 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டமும் மகளிர் தினவிழாவும் ஐங்கரன் மண்டபத்தில் நடைபெற்றபோது நாடகத்தில் பங்குபற்றிய மகளிருக்கு தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உமாபாலன் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை —

பருத்தித்துறை தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தி.சந்திரசேகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய தலைவராக ச.சத்தியானந்தன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக த.இராகவன், செயலாளராக த.பால்ராஜ், உபசெயலாளராக சி.காண்டீபன், பொருளாளராக இ.மகிந்தராஜ், கிரிக்கெட் அணித் தலைவராக சு.அரவிந்தன், செயற்குழு உறுப்பினராக தி.ரோகுலன், ச.சயந்தன், கேதீஸ்வரன், கே.வைகுந்தராம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட் டனர்.

கடந்த க.பொ.த சாதாரணதர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்குகள் இந்தப் புதிய தலைவரின் ஏற்பாட்டில் நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியருக்கான கொடுப்பனவை மே 31 இற்கு முன் வழங்க பணிப்பு

யாழ்ப்பாணம் —

கடந்த வருடம் திருத்தி அமைக்கப் பட்ட ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம், ஆசிரியர்களுக் கான பதவி உயர்வுகள் மற்றும் அவர் களுக்கு வழங்க வேண்டிய சம்பள உயர்வுகளை மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் செய்து முடிக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

மாகாண கல்வி அமைச்சின் செய லாளர்கள், மாகாண கல்விப் பணிப் பாளர்கள், வலயக் கல்வித் திணைக் கள கணக்காளர்கள், நிர்வாக அதி காரிகள் உட்பட உயர் அதிகாரிகள் மற்றும் 12 ஆசிரிய தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந் துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆறாம் திகதி நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட 12 தொழிற் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சம்பளம் மாற்றி அமைப்பு, பதவி உயர்வுகள் வழங்கப்படும்போது ஏற் படும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான செயல்முறை விளக்கங் களும் வழங்கப்பட்டன.

## மூன்று புதிய குருக்கள்

யாழ்ப்பாணம் —

யாழ். மறைமாவட்டத்தில் மூவர் புதிய குருக்களாக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநரநாயகம் ஆண்ட கையால் திருநிலைப்படுத்தப்பட வுள்ளனர்.

யாழ். மரியன்னை பேராலயத்தில் இந்த மாதம் 25 ஆம் திகதி அருட்சகோ தரர்களான பால்தாஸ் பிறாயன், நீக் கலஸ் லெஸ்லி அன்ரனி, எட்வேட் செ.கி.மரியதாஸ் ஆகியோர் புதிய குருக் களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ள னர்.

## சமுர்த்தி அதிகாரசபையால் பிரதேச மட்ட அபிவிருத்தி

யாழ்ப்பாணம் —

சமுர்த்தி அதிகார சபையால் பிர தேச செயலர் பிரிவு ரீதியாக பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளதாக சமுர்த்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் அடிப்படையில் சுயதொழில், சமூகநோக்கு, உட்கட்டமைப்பு வசதி களை வழங்கும் முதலாவது வேலைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்மூல[illegible] யதொழில் தி[illegible]டத் துக்கு மேற்கொள்ளப்படும் பயனாளி களின் மாத வருமானம் 5000 ரூபா கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

குடிநீர் விநியோகத்துக்காக பய னாளி ஒருவர் 10 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொள்வார்.

மலசல கூடத் திட்டத்துக்காக ஒரு பயனாளி 6000 ரூபாவை பெறு வார். அத்துடன் வீடமைப்பு செயலர் பிரிவிலும் தலா 15 வீடுகள் அமைக் கப்படும். இவ்வாறு அதிகார சபை வட் டாரங்கள் மேலும் தகவல் தெரிவித் தன.

# சர்வதேச சூழலை எதிர் கொள்வதற்கு தமிழக மக்களின் பலமே அடிப்படை

**தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒளிபரப்பாகிய 'நிலவரம்' நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு தெரிவித்த கருத்துக்கள்.**

இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை சர்வதேசத்தின் நிலைப்பாடுகள் என்பது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன.

மேற்குலகைத்தைப் பொறுத்தவரை இலங்கைக்குள் தங்களது அரசியல் பொருளாதார நலன்களைப் பேணுவதற்குப் பேச்சுவார்த்தை என்பது ஒரு கருவி.

சீனா, பாகிஸ்தான் நாடுகளோ இலங்கையில் அரசியல் குழப்பம் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றன. இந்தக் குழப்பங்கள் அதிகரித்து முதிர் வடையும் போது, இலங்கைத் தீவில் தாங்கள் எப்படிக் கால் பதிக்கலாம் என்று அவை எண்ணுகின்றன.

இலங்கையில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடக் கூடாது, மாறாக பிரச்சினைகளானது - படிப்படியாக முதிர்ச்சியடைய வேண்டும் என்பதுதான் சீனா, பாகிஸ்தான் நாடுகளின் விருப்பம்.

இலங்கையில் பிரச்சினைகள் வேகமாக வளர்ந்தால், இந்தியா தனது நலன்களை இலங்கையில் நிலைநிறுத்த முயற்சித்துவிடும் என்பதால், சீனாவும் - பாகிஸ்தானும் அத்தகைய ஒரு நிலைப்பாட்டை கொண்டுள்ளன.

இந்தியாவோ இப்போது உள்ள நிலை தொடரட்டும் என்றும், தங்களுக்கு ஒரு வாய்ப்பான சூழலுக்காகவும் காத்திருக்கிறது.

மேற்குலக நாடுகள் விரும்புகிற பேச்சுவார்த்தையும், இந்தியாவின் இந்த நிலைப்பாடும் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை எமது பிராந்திய சூழலில் எமக்குச் சர்வதேசம் என்பது முதலில் அமெரிக்காவும், இந்தியாவும் தான்.

- இந்தியாவானது, இலங்கை அரசாங்கத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

- மேற்குலக நலன்கள் தனக்குப் பாதகமற்ற வகையில் வரையறை செய்து கொள்ள வேண்டும்.

- சீனா, பாகிஸ்தான் நாடுகளானது- இலங்கைக்கு ஆயுத உதவிகள் செய்வதனூடாக நிகழ்த்தும் ஊடுருவலைத் தடுக்க வேண்டும்.

- அரசியல் ரீதியாக இராஜதந்திரிகள் ஒன்றைப் புரிந்து வைத்துள்ளார்கள். அதாவது தமிழகத்தின் பலம்தான் தமிழீழத்தின் உறுதிப்பலம். ஆகவே, தமிழகத்தையும், தமிழீழ போராட்டத்தையும் ஒருங்கு சேர கையாள வேண்டும்.

என்ற நான்கு சக்திகளை இந்தியா எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட சர்வதேச சூழ் நிலையில் இப்போது சண்டை இல்லை என்பதுதான்.

அதாவது - இலங்கை நிலைமைகள் உடனே மோசமடைந்து விடக் கூடாது என்று சீனாவும், பாகிஸ்தானும் எண்ணுகின்றன.

இலங்கை நிலைமை மோசமடைந்து விட்டால், இந்தியாவின் பின்னால் நிற்க நேரிடும் என்று மேற்குலகம் கருதுகிறது.

இந்தியாவோ சரியான வாய்ப்புக்குக் காத்திருக்கிறது.

ஆகையால், இப்போது யுத்தம் இல்லை.

எனவேதான் இலங்கை அரசாங்கத்தால் யுத்தத்துக்குப் போக முடியவில்லை.

மகிந்த ராஜபக்ஷவினது வழிமுறை யுத்தம்தான்.

ஆனால், சர்வதேச சூழலில் அவரால் யுத்தத்துக்குச் செல்ல முடியாது.

அப்படியானால், இரா[illegible]வம் தாக்குதல் நடத்துவதைக் கொ[illegible] சிலர் கருதலாம் மகிந்த ராஜபக்ஷ யுத்தத்துக்குத் தயார் என்று. நிச்சயமாக இல்லை. மகிந்தவின் வழிமுறையானது - யுத்தத்தை ஆங்காங்கே பொறிதட்ட விடுவது - வெளிக்கிளம்ப விடுவது. ஆனால், முழு அளவில் யுத்தம் செய்ய முடியாது.



இத்தகைய சர்வதேச சூழலை ஈழத் தமிழர்கள் எப்படி எதிர்கொள்ள முடியும்?

தமிழீழ போராட்டத்தின் முதலாவது அடிப்படை அரசியல் பலமானது - தமிழீழத்துக்கு வெளியே தமிழகம்தான்.

எதிர்காலத்திலும் தமிழகத்தின் அனுசரணையானது - எமக்கு 100 வீதம் அத்தியாவசியமானது.

கட்சி வேறுபாடுகளுக்குஅப்பால் தமிழகத்தின் ஏகோபித்த ஆதரவைப் பெற வேண்டும் என்பதுதான் தமிழீழத்தின் அடிப்படை அரசியல் நிபந்தனை.

தமிழகத்தின் ஆதரவு இருக்குமேயானால், நாம் இந்திய அரசை எதிர்கொள்ள முடியும். மேற்குலகத்தையும் எதிர்கொள்ள முடியும். சீனா, பாகிஸ்தானையும் எதிர்கொள்ள முடியும்.

இந்திய மத்திய அரசானது - எப்போதுமே தந்திரோபாயமான வகையில் தீர்மானங்களை எடுக்க வல்லது. தனது தீர்மானங்களை இந்தியா நடைமுறைப்படுத்தும் போது, வேறு வேறு வகையான செயல்களுக்குப் போக முடியும். தீர்மானங்களை எடுக்கும் தளத்தில் அவர்களுக்குத் தேர்ச்சி உண்டு.

உதாரணமாக நேபாளப் பிரச்சினையைப் பார்க்கலாம்.

நேபாளத்தில் பிரச்சினையை எரியவிட்டிருந்தார்கள்.

எந்த நேரத்திலும் மன்னர் கைது செய்யப்படலாம் - கொல்லப்படலாம் என்ற வகையில் மன்னரது அரண்மனை முற்றுகையிடப்பட்டது.

இப்படியெல்லாம் மக்களின் போராட்டத்தை நன்கு வளர்ச்சியடையவிட்டு-மாவோயிசப் போராளிகளையும் நன்கு வளரவிட்டு - இறுதி நிலைமையில் சிறப்புத் தூதுவர் மூலம் நேபாளப் பிரச்சினையின் முழுக்கட்டுப்பாட்டையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கொண்டு வந்துவிட்டார்.

கடந்த கால்நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றில் இந்தியா முக்கியமான இராஜதந்திர வெற்றியை அடைந்திருக்கிறது. இதனை நாம் ஏன் கற்றுக்கொள்ள வேண்டும்?

நம்முடைய அரசியல் தலைவிதியில் மிகவும் நெருக்கமாகப் பின்னிப் பிணையப் பட்டிருக்கும் இந்தியா -ஒரு பிரச்சினையை எப்படி கையாண்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்வதன் மூலம் நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ள முடியும்.

இந்திய அரசானது - தமிழீழ விடுதலைப் போராட்டத்தோடு தவிர்க்க இயலாத ஒரு பகுதி. ஆகையால் தான் எரிக் சொல்ஹெய்மாக இருந்தாலும், யாராக இருந்தாலும் இந்தியாவுக்கு விளக்க வேண்டியுள்ளது. பாகிஸ்தானுக்கு மகிந்த ராஜபக்ஷ சென்ற போதும் கூட, தனது அமைச்சரைஅவர் புதுடெல்கிக்கு விளக்கம் அளிக்க அனுப்பியிருந்தார்.

இந்திய மத்திய அரசை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு தமிழகம்தான் அடிப்படையானது.

திருகோணமலையில் இராணு வத்தால் விமானக் குண்டு வீச்சு நிகழ்த்தப்பட்டபோது -

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்த கண்டனமானது - சிங்களத்தைப் பாதித்துள்ளது.

பழைய டிக்சிற் பாணிக்கு இந்தியா போய்விட்டதா? எங்களை வெருட்டப் போகிறதா? என்று சொல்லும் நிலை உருவாகியுள்ளது.

அப்படியென்றால், இந்த யுத்தத்தில் அவர்கள் ஒரு பாத்திரம் வகிக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்.

இதில் யாருக்கு சாதகம், பாதகம் என்பது அதனைக் கையாளும் விதத்தைப் பொறுத்தது.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரை சர்வதேச தளம் என்று கருதுவது தமிழக மக்களைத்தான். அதை நம் பக்கம் நாம் வைத்திருப்போமேயானால், இந்திய மத்திய அரசை கையாள முடியும். இந்திய மத்திய அரசை நாம் கையாளக் கூடியதாக இருந்தால், அமெரிக்காவை கையாள முடியும்.

இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவும், அமெரிக்காவும் கூட்டுச் சேருமாக இருந்தால், சீனாவும் - பாகிஸ்தானும் தலையெடுக்க முடியாது.

நாம் அரசியல் கட்சிகளை நம்புவதைவிட, மக்களை நம்புவது முக்கியமானது என அவர் தெரிவித்தார்.

---

**தமிழ் கூட்டமைப்பு குழப்பினாலும்**

## நாடாளுமன்றை தொடர்ந்து நடத்த ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு - நாடாளுமன்ற அமர்வு களைக் குழப்புவதற்கு முயற்சித்தால், அதனை தோல்வியுறச் செய்து, நாடாளுமன்ற தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசதரப்பு நாடாளுமன்ற குழுவிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இரவு அலரிமாளிகையில், நடைபெற்ற அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எதிர்ப்பால் நாடாளுமன்றை ஒத்திவைக்கும் சூழல் ஏற்பட்டால், கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, நாடாளுமன்றின் சபை அமர்வுகளை நடத்த தயாராக இருக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (தே)

---

## புலிகளுக்கு போலி அடையாள அட்டை வழங்கிய சிங்கள வர்த்தகர் கைது

கொழும்பு

வடக்கு - கிழக்கிலிருந்து கொழும்புக்கு வரும் விடுதலைப்புலிகளுக்கு போலி அடையாள அட்டைகளை தயாரித்து வழங்கியதுடன் பல்வேறு உளவுத் தகவல்களையும் வழங்கி வந்தாரெனத் தெரிவித்து சிங்கள வர்த்தகர் ஒருவர் ராகம - பிரதேசத்தில் கைது செய்யப்பட்டார்.

ராகமவில் வசிக்கும் இந்த சந்தேகநபர், பமுணுகம பிரதேசத்தில், தொலைத்தொடர்புநிலைய மொன்றை நடத்தி வருபவராவார். இவர் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதுடன், வட - கிழக்கிலிருந்து கொழும்புக்கு வரும் விடுதலைப்புலிகளுக்கு போலி யான அடையாள அட்டைகளை வழங்குபவரெனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர் தனது நடவடிக்கைகளுக்காக புலிகளிடமிருந்து பெருமளவு பணத்தைப் பெற்றுள்ளார். இந்த வர்த்தகரை சந்திப்பதற்காக கிளிநொச்சியிலிருந்து விடுதலைப் புலிகளின் புலனாய்வுப்பிரிவு உறுப்பினர்கள் பல்வேறு தடவைகள் வந்து சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (தே)

---

## அனர்த்த முகாமைத்துவமும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும்

### கல்வி அமைச்சு அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு

பாடசாலை பாடவிதானங்களில் அனர்த்த முகாமைத்துவ முற்பாதுகாப்பு தொடர்பான விடயங்களை சேர்த்து வெளியிடகல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாக கல்வி அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

கடந்த 2004 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவை அடுத்து அது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு அங்கமாகவே அனர்த்த முகாமைத்துவ முற்பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

* இதன் பொருட்டு கல்வியியல் கல்லூரிகளில் கற்றல், கற்பித்தல், செயற்பாடுகளுக்கென துணை சாதனங்கள் தயாரிக்கப்படவுள்ளன. இதன் மூலம் ஆசிரியர் மற்றும் மாணவரிடையே அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமான அறிவு விருத்தி செய்யப்படும்.

இந்தத் திட்டம் தொடர்பாக ஆசிரியர்களுக்கும், கல்வியில் தொடர்புபட்ட அதிகாரிகளுக்கும் பயிற்சிகளும், செயலமர்வுகளும் வழங்கப்படும். பாடநூல்கள் தேசிய நிறுவனத்தால் தயாரிக்கப்படும்.

இந்தத் திட்டத்துக்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் ஒத்துழைப்பு வழங்குகிறது. பாடத்திட்டங்களை தயாரிப்பதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படும் என அதிகாரி மேலும் தெரிவித்தார்.

---

## சுனாமியால் தொழிலை இழந்தோருக்கு மானிய உதவித் திட்டம் அறிமுகம்

கொழும்பு

சுனாமியால் பாதிக்கப்பட்டு தொழிலை இழந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான மானிய உதவித் திட்டமொன்றை ஆசிய அபிவிருத்தி வங்கி நடைமுறைப்படுத்தவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை உட்பட பத்து மாவட்டங்களில் இந்த மானிய உதவித்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 500 குடும்பங்கள் நன்மையடையவுள்ளன. இந்தத் திட்டத்தை செயற்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி 200 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது. இதன்படி தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு குடும்பமும் மாதமொன்றுக்கு 8 ஆயிரத்து 800 ரூபா வீதம், 4 மாதங்களுக்கு பெறவுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரசார ஆலோசகர் டொக்டர் எஸ். பிரியந்த தெரிவித்தார்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு....
நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்புஇல்சொல் பல்லார் அகத்து.

திருக்குறள்

## நமது நோக்கு

# உரத்துச் சொல்லும் தருணம்

தென்னிலங்கையில் இருந்து இப்போது கடுமையான போர்க்குரல்கள் எழும்பத் தொடங்கியிருக்கின்றன. புலிகளுக்கு எதிராக போரைத் தொடங்கவேண்டும் என்றும், பேச்சுக்களை நிறுத்திவிட்டு போர் மூலம் புலிகளை அழிக்கவேண்டும் என்றும் ஜே.வி.பி மற்றும் ஜாதிகஹெல உறுமய ஆகிய கட்சிகள் பகிரங்கமாகவே கூச்சலிடத் தொடங்கியிருக்கின்றன.

ஏதோ இப்போது தமிழ்மக்கள் மீது போர் கட்டவிழ்த்து விடப்படாமல் இருப்பது போலத்தான் இவர்களின் பேச்சும், செயலும் அமைந்திருக்கிறது. அதே வேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கூட – தாம் போரைத் தொடங்கப்போவதாக தேசப்பற்று தேசிய இயக்கத்திடம் உறுதியளித்ததாக விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

அதாவது தென்னிலங்கை இப்போது உத்தியோகபூர்வமாக போரைத் தொடுக்க தயாராகியுள்ளதென்ற செய்தி உறுதியாகியிருக்கிறது. ஆனால், நடைமுறையில் இப்போது தமிழ்மக்கள் மீதான போர் தொடுக்கப்பட்டிருக்கிறதென்பதே உண்மை.

சர்வதேச சமூகத்துக்கு மட்டுமே இப்போது போர் நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருக்கிறது. ஆனால், அரச படைகள் போர்நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடிக்கின்றனவா என்றால் – இல்லை என்பதே பதிலாக இருக்கிறது.

தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவது, தாக்கப்படுவது, கைதுசெய்யப்படுவது, காணாமற்போவது என்று போர்க்காலத்தில் நடக்கக்கூடிய அத்தனை சம்பவங்களும் இப்போது நடந்துகொண்டு இருக்கின்றன.

அரச படைகளின் அடாவடித்தனங்களால் வீதிகளில் இறங்கி நடமாட முடியாத அளவுக்கு மக்கள் அச்சம் அடைந்து போயுள்ளனர். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டத்தை ஒரு காரணமும் இல்லாமல் பிறப்பித்து அரச படைகள் வேடிக்கை பார்த்திருந்தன.

இப்படியாக தமிழ் மக்களின் மீது எந்தளவுக்கு அடக்கு முறைகள், அடாவடித்தனங்களை நிகழ்த்த முடியுமோ அதற்கான அனைத்துச் சந்தர்ப்பங்களையும் அரச படையினர் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால், வெளியுலகுக்கு மட்டும் சமாதானத்தில் பற்றுறுதி கொண்டிருப்பதாக அரசு பிரசாரம் செய்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் தான் புலிகள் மீதான போரைத் தொடங்குவதற்கான குரல்கள் தெற்கில் தீவிரம் பெறத் தொடங்கியிருக்கின்றன.

மிக விரைவாகவே இந்த உத்தியோகபூர்வ போர் வெடிக்கும் போலவே தெரிகிறது. ஏனெனில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதற்கான உறுதிமொழியைத் தனது இனத்துவேசக் கூட்டணியான ஜே.வி.பியிடம் கொடுத்திருக்கிறார்.

ஆக சிங்கள தேசம் தமிழ் மக்கள் மீதான போரை வெளிப்படையாக நடத்துவதற்கான தயார்படுத்தல்களையும் செய்துவிட்டதென்பது உறுதியாகிவிட்டது. இந்த நிலையில் தமிழ் மக்கள் மீது இராணுவம் இனியும் போர்க்கெடுபிடிகளைத் திணிப்பது உறுதியாகிவிட்டது.

இந்தளவு அநியாயங்களும் தமிழர் பகுதிகளில் நடந்துகொண்டிருக் கின்ற போதும் கூட – சர்வதேச சமூகம் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் இருப்பது ஏன் என்ற கேள்வி தமிழ் மக்கள் இடத்தில் எழுந்திருக்கிறது.

தமிழர் தரப்பின் நியாயபூர்வமான உரிமைகள் நசுக்கப்படும் போதும் – அவர்களின் உரிமைக் கோரிக்கைகள் தூக்கிவீசப்படும் போதும், ஏன் சர்வதேச சமூகம் மௌனியாக இருக்கிறது?

எமது உரிமைக் கோரிக்கையை சர்வதேச மயப்படுத்துவதில் இன்னமும் வீச்சுடனும், வேகத்துடனும் செயற்படத் தவறிவிட்டோமோ என்ற உணர்வுதான் மேலிடுகிறது.


உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் போர்க்கெடுபிடிகள், அடக்குமுறைகளை எடுத்துச் சொல்லவேண்டிய தருணம் உருவாகிவிட்டதை உணர முடிகிறது.

ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் போரை சர்வதேச ரீதியில் எடுத்துச் சென்று உரிமைக் கோரிக்கையின் நியாயத்தை உணர வைக்கவேண்டும். அதன்பால் ஒட்டு மொத்த தமிழர்களும் தமது உழைப்பை செலுத்த வேண்டும்.

இதைச் செய்யாவிடின் சிங்கள தேசத்தின் அழிவுத் தாக்குதலுக்குள் ஒட்டுமொத்த தமிழினமுமே சிக்கிச் சிதைந்து போகநேரிடும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# புலிகளுக்கு எதிரான போரை நடத்தி இராணுவ ரீதியாக தோற்கடிக்க வேண்டும்

## என்கிறார் விமல் வீரவன்ச



கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகள் நான்காம் கட்ட ஈழப்போரைத் தொடங்கிவிட்டதால் அரசாங்கம் போரை நடத்தியே ஆகவேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு குறித்த விவாதத்தில் ஜே. வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ச பேசியதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகள் நான்காம்கட்ட ஈழப்போரைத் தொடங்கிவிட்டனர். எனவே, மக்கள் இந்தச் சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டும். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண முடியும் என்று சிறு நம்பிக்கையும் இப்போது இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்க அரசாங்கம் முக்கியமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்திடம் எந்தவித இறுதித் தீர்வும் இல்லை. இருந்தபோதும், சர்வதேச சமூகத்தை மகிழ்ச்சியடையச் செய்வதற்காக பேச்சுக்களினூடேயான தீர்வுக்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்திய ராஜீவுக்கு எதிராகச் செயற்பட்டதன் மூலம் விடுதலைப் புலிகள் கூட்டாட்சி முறையை நிராகரித்துவிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாட்டைத்தான் விரும்புகின்றனர். அப்படியான சூழ்நிலையில் அரசாங்கம் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டுமா?

சூடானில் நோர்வே உள்ளடக்கிய சர்வதேச சமூகமானது விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை போன்ற ஒரு இடைக்கால நிர்வாகத்தினூடே 72 வீதம் சன்னி முஸ்லிம்கள் கட்டுப்பாட்டில் வட சூடான் இருந்தபோதும் மொத்த மக்கள் தொகையில் வெறும் 5 வீதமே உள்ள கத்தோலிக்கர்களிடம் வடசூடான் நிர்வாகத்தைக் கொடுத்துவிட்டனர்.

போரின் மூலமாக சைப்ரஸ் ஒப் பந்தம் போல் ஒன்றை உருவாக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இலக்கு வைத்துள்ளனர். அதன் மூலம் ஐ.நா. அமைதிப்படையினர் கண்காணிப்பாளர்களாக வந்து போராளிகள் மற்றும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் என்பதை உறுதி செய்து கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவர்.

சைப்ரசில் பாரிய பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து ஐ.நா. அமைதிப் படையை சைப்ரஸ் அரசாங்கம் கோரியது. அதேபோன்றதொரு போரை இலங்கை அரசாங்கம் மீது விடுதலைப் புலிகள் திணிக்கின்றனர். வடக்கு - கிழக்கில் தங்களது அறிவிக்கப்படாத அரசாங்கக் கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக்கொள்ள விடுதலைப் புலிகள் முனைகின்றனர்.

இந்த அடிப்படையில் இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைகின்றபோது ஐ.நா.அமைதிப் படையினர் அழைக்கப்படுவர் என்று ஜப்பானின் சிறப்புத்தூதுவர் அகாசி கூறியிருப்பது மிகவும் ஆபத்தானது.

எனவே, சைப்ரசில் நடந்ததைப் போல் இலங்கையில் நடக்காமல் தடுப்பதற்கு அரசாங்கத்துக்கு இருக்கும் ஒரே வழி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரை நடத்தி, இராணுவ ரீதியாக அவர்களைத் தோற்கடிப்பதுதான் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு!

கொழும்பு —

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணையை நேற்றுமுன்தினம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பித்த வேளை அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தின் முன்பாக உண்ணா விரதத்தில் ஈடுபட்டிருந்ததால் சட்டம் நிறைவேற்றப்பட்ட வேளை - சபையில் பிரசன்னமாகவில்லை.

இதேவேளை - வன்முறைச் சம்பவங்களால் கடந்த மாதம் மட்டும் 58 படையினரும், 117 பொதுமக்களும் கொல்லப்பட்டதாக பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

அத்துடன், விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு சமாதான நடவடிக்கைகளைச் சீர்குலைத்து வருகின்றனர். சமாதானச் செயற்பாடுகளில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட போதும், விடுதலைப் புலிகள் அதற்குப் புறம்பாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (01)

# முழுமையான பணிப் புறக்கணிப்புக்கு திருகோணமலையும் தயாராகிறது!

கொழும்பு —

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இனப்படுகொலையை சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்தும் வகையில் திருகோணமலையில் விரைவில் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

சம்பூரில் முப்படையினர் நடத்திய கொடூரத்தாக்குதல், யாழ்ப்பாணம் உட்பட தமிழர் தாயகத்தில் காணாமல் போதலும், படுகொலைகளும் அதிகரித்துள்ளமை, உதயன் நாளிதழ் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் ஆகியவற்றை சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்த திருமலை தமிழ் அமைப்புகள் முடிவு செய்துள்ளன.

முன்னர் போல பாடசாலைகள், வங்கிகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டுமல்லாது தொழிற்சாலைகளின் செயற்பாடுகளையும் நிறுத்த இந்த முறை முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே திருமலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் அதிகாரி நிஹால் சமரக்கோன் தெரிவித்தார்.

முச்சக்கர வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவை தீவிர சோதனையிடப்படுகின்றன. இவற்றின் மூலம்தான் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றன.

இருப்பினும் தற்போது எமது உத்திகளை நாங்கள் மாற்றியுள்ளோம். அனைத்து வாகனங்களினதும் உரிமையாளர்கள் மற்றும் அவர்களது முகவரிகள் அடங்கிய குறிப்புகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

திருகோணமலை நகருக்குள் எந்தவித வாகனங்களும் அனுமதிக்கப்படவில்லை. திருமலையில் பிற்பகல் 1.30 மணிக்குப் பின்னர் நகருக்குள் வருவதற்கு மக்கள் அச்சம் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தற்கொலைக் குண்டுதாரி உயிருடன் இருக்கிறாராம்!

## சிங்கள இணையத்தளம் புதிய தகவல்

கொழும்பு—

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மீதான தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்பட்ட பெண் உயிருடன் இருப்பதாகக் குற்றப் புலனாய்வுப்பிரிவு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி லங்கா நியூஸ் என்ற சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தாக்குதல் நடைபெற்ற இடத்தில் 8 அடையாள அட்டைகள் காணப்பட்டதாகவும், அவற்றில் வவுனியாவைச் சேர்ந்த அனோஜா குகேந்திரராசா என்பவருடைய அடையாள அட்டையும் உள்ளடங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டைகள் மீட்கப்பட்டதையடுத்து வவுனியாவுக்கு விரைந்த குற்றப் புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டபோது தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படும் பெண் உயிருடன் இருப்பதாகவும், அவர் வெடிகுண்டுத் தாக்குதலுடன் தொடர்புகொண்டிருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளதெனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வன்முறைகள் தொடர்ந்தால் அபிவிருத்தி பாதிக்கப்படும்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கை

கொழும்பு—

இலங்கையின் வடக்கு – கிழக்கில் வன்முறைகள் தொடர்ந்தால் அபிவிருத்திப் பணிகள் பாதிப்படையும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி அலெக்சான்ட்ரோ பையோ இது குறித்து கூறியுள்ளதாவது –

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு முன்னதாகப் பாதுகாப்பு நிலைமைகளை அவதானித்து வருகிறோம்.

வடக்கு – கிழக்கின் தற்போதைய நிலைமைகளால் எமது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எமது அலுவலகப் பணி நேரங்கள் குறைக்கப்பட்டுவிட்டன.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேச்சு மேசைக்கு விரைவில் திரும்ப வேண்டும். அனைவரது கவனமும் இரு தரப்பினர் மீதே உள்ளன.

இந்த நா_டுக்கு உதவி வழங்குவதற்கு மு_னதாக அமைதியான சூழ்நிலை_யையே உதவி வழங்கும் அமைப்புகள் எதிர்பார்க்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச பயங்கரவாதம் தமிழர்மீது திணிக்கப்படவில்லையாம்!

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு—

தமிழ்மக்கள்மீது அரச பயங்கரவாதம் மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களைப் பயன்படுத்தி இராணுவத்தினர்மீது தாக்குதல்களை மேற்கொள்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இந்தக் கருத்துக்களை நேற்று வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு மத்தியில் பொறுமை காக்கின்றபோதும் - நாட்டின் நீதி மற்றும் பாதுகாப்பை கருத்திற்கொண்டு பொலிஸாரும், படையினரும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடுகிறது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குவர இன்னும் தாமதமாகவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# சங்கானையில் கைதானோர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்—

யாழ். சங்கானை பொதுச்சந்தைப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்ட ஆறு இளைஞர்களும் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை சங்கானை பொதுச் சந்தைப் பகுதியில் வைத்து படையினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் ஆறுபேரையும் படையினர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆறுபேரும் சந்தைப் பகுதியில் குத்தகை பெறுபவர்கள் எனத் தெரியவருகிறது.

ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னரே மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## வடக்கு – கிழக்கு...

அமைக்கப்படவுள்ளன. அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கும் விசேட திட்டம் வகுக் கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனைத்தும் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டதுடன், வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து உயர்தரப் பாடசாலைகளுக்கு உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும்.

பரீட்சை நிலையங்களுக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கச் சம்மதித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்க ஊழியர்களுக்கு விசேட அடையாள அட்டை!

யாழ்ப்பாணம்—

யாழ். குடாநாட்டில் அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு சோதனைச் சாவடிகள், தடைமுகாம்கள் ஊடாக இடையூறுகள் இன்றிப் பயணம் செய்வதற்கு வசதியாக விசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பாதுகாப்பு நடவடிக்கைச் செயலகம் நேற்றிரவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்.குடாநாட்டில் அத்தியாவசிய சேவைகள் அதிகாரிகளுக்கான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகள் மற்றும் அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

யாழ். குடாநாட்டில் அரச நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகள், அரச ஊழியர்கள் சோதனைகளின்போது எவ்வித இடையூறுகளுமின்றிப் பயணம் செய்வதற்கு வசதியாக விசேட அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் விபரங்களை அந்தந்தப் பிரதேச செயலாளர் ஊடாக நிறுவனங்களிடம் பெற்றுத்தருமாறும் கோரப்பட்டது.

குடாநாட்டிலுள்ள வைத்திய சாலைகளுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை கப்பல் மூலம் எடுத்து வந்து உடனுக்குடன் விநியோகிப்பதற்கும், நோயாளர்களை ஏற்றிச் செல்லும் அம்புலன்ஸ் வாகனங்களைத் தாமதமின்றி எந்தவிதச் சோதனைகளுமின்றி உடனடியாக பிரயாணங்களைச் செய்வதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

அரச நிறுவனங்களை முறையாக நடத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தியாவசிய சேவையிலிருக்கும் அரசாங்க ஊழியர்கள் விசேடமாக முன்னுரிமை அடிப்படையில் முகமாலைச் சோதனைச் சாவடியூடாகப் பயணம் செய்வதற்கும், பொதுமக்கள் இரவு நேரங்களில் அல்லது நள்ளிரவில் முகமாலைச் சோதனைச் சாவடியூடாக உள்வருவதற்கும், வெளியே செல்வதற்கும், அவசியம் ஏற்படும்போது உடனே சோதனைச் சாவடியைத் திறந்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இதேவேளை- அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அரச பணிகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தாமதமின்றிப் பெற்றுக் கொடுப்பதற்கும், மக்களுக்கு உதவிகள் தேவைப்படும்போது அருகிலுள்ள இராணுவ முகாம் அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தெரிவித்ததாக அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

## வரணி...

கிலோமீற்றர் தொலைவில் 52 ஆம் டிவிஷன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காவலரண்...

கொண்டதோடு, அந்த வீதியால் பயணித்த பொதுமக்களைத் தாக்கியதாகவும் தெரியவருகிறது.

## போரா?...

ரோக்கியோவில் இணைத் தலைமை நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே ஆகியன கூடி விவாதிக்கவுள்ளன. இந்தியாவும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்படும்.

சர்வதேச சமூகமாகிய எங்களால் இந்த முயற்சிகளுக்கு ஒரு ஆதரவு நிலை மட்டுமே அளிக்க முடியும். ஆனால், எம்மிடம் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். விமர்சனங்களும் எம்மீது முன்வைக்கப்படுகின்றன.

நாம் அமைதி முயற்சிகளோடு எங்கே நிற்கிறோம்? இது எங்கே போகப்போகிறது? ஏன் அமைதி முயற்சிகளில் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை? என்று நம்மை நாமே ஆத்ம பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மோசமான பதற்ற சூழ்நிலையையும், ஆபத்தான நிலைமையையும் குறைப்பதற்காக ஒவ்வொருவரும் தங்களால் சிறப்பாக எதைச் செய்ய இயலுமோ அதைச் செய்து வருகின்றனர்.

இலங்கைக்கான ஜப்பானின் சிறப்புத் தூதுவராக 2002 ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்றது தொடக்கம் இப்போதுதான் நிலைமை மிகமோசமடைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நீதிக்குப் புறம்பான படுகொலைகளை துணை இராணுவக் குழுவினர் உதவியுடன் அரச படைகள் மேற்கொள்வதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இலங்கைக்கான பயணம் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்துகொள்வதற்காக இந்தியாவுக்கு நாளை விஜயம் செய்கிறேன். டோக்கியோவில் இந்தியா என்ன மாதிரியான பங்களிப்பைச் செய்யவேண்டுமென நாம் கட்டளையிட முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எம்மைச் சந்திக்க மறுத்ததாக சில ஊடகவியலாளர்கள் [illegible]றிப்பிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்தபோது - எம்மை பிரபாகரன் சந்திக்க இயலாமை குறித்து விளக்கமளித்தார். நாமும் அதை ஏற்றுக் கொண்டோம்.

படையினர் தமது கடமைகளைத் தவிர ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் கேட்டுள்ளனர்.

இதனை ஜனாதிபதி உறுதிப்படுத்த வேண்டுமென விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஜப்பானிய அரசாங்கத்தின் ஊடாகக் கோரியுள்ளார். படையினர் போர் நிறுத்த உடன்படிக்கையை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக படைத் தளபதி என்ற வகையில் படைகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் செய்திக்கு ஜனாதிபதியின் சார்பில் பதிலளிக்கும் வகையிலேயே நாடாளுமன்றத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றினார்.

தற்போதைய பதற்ற சூழ்நிலைக்கு இரண்டு தரப்புக்கும் இடையிலுள்ள நம்பிக்கையீனங்களே காரணமாகும்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் இரண்டு தரப்புக்களாக அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளுமே இருக்கின்றனர். இவர்களுக்கு அனுசரணை வழங்கும் பொறுப்பை நோர்வே சிறப்பாகச் செய்து வருவதாக அகாஷி மேலும் குறிப்பிட்டார். (01)



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி - நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேசிய போது...

# கூட்டுப்படைத் தளபதியாக டொனால்ட் பெரேரா!

கொழும்பு—

விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா கூட்டுப் படைகளின் தளபதியாகவும் நியமிக்கப்படவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது கூட்டுப்படைகளின் தளபதியாக இருக்கும் அட்மிரல் தயா சந்தகிரி இராணுவ ஆயுதக் கொள்வனவு ஊழல்கள் குறித்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட குழுவால் விசாரணக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதனால் கூட்டுப்படைகளின் தளபதி பதவியிலிருந்து அட்மிரல் தயா சந்தகிரியை நீக்கிவிட்டு - இவருக்குப் பதிலாக விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேராவை நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

விமானப்படைத் தளபதி தொடர்ந்தும் அதே பதவியை வகிப்பார் என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை - கூட்டுப்படைகளின் தளபதி பதவியிலிருந்து நீக்கப்படவுள்ள அட்மிரல் தயா சந்தகிரியை பாகிஸ்தானுக்கான தூதுவராக நிய மிக்கவும் அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# போக்குவரத்து ஊழியர்களுக்கு 1750 ரூபா சம்பள உயர்வு!

கொழும்பு—

இலங்கை போக்குவரத்து சபையின் அனைத்து ஊழியர்களுக்கும் 1750 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் தகவலை போக்குவரத்துத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி உறுதிப்படுத்தினார்.

போக்குவரத்துச் சபையில் 38 ஆயிரம் [illegible]யர்கள் உள்ளனர். இவர்க[illegible]ரசு 77.8 [illegible]யன் ரூபாவை அரசு சம்பளமாக வழங்கி வருகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.